LIBRARY
11 FEB 2011
Eastern University, Sri Lanka.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

**DTA 201** சிங்கள-தமிழ் நாடக வடிவங்கள் பற்றிய சிறப்பு நோக்குடன் இந்திய நாடகத்தின் பரிணாம வளர்ச்சி

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. இந்திய அரங்கின் தோற்றம் தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்துக்களை நாடக ஆய்வாளர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

02. "இந்தியாவின் தொல்சீர் அரங்க வடிவத்தின் பிரதான சான்றாக விளங்குவது நாட்டிய சாஸ்திரமாகும்." நாட்டிய சாஸ்திரம் தரும் நாடகம் பற்றிய தகவல்களை வகைப்படுத்தி விளக்குக.

03. இந்திய செந்நெறி அரங்கின் நாடக ஆசிரியர்களை வகைப்படுத்தி அவர்களின் நாடகப் படைப்புக்களை குறிப்பிடுவதோடு அவற்றில் உமக்கு விருப்பமான ஒரு நாடகத்தின் நாடகக் கட்டமைப்பைத் தெளிவுபடுத்துக.

04. "தமிழ் நாட்டில் சோழர் காலம் நாடக வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

05. ஈழத்தில் பயில்முறையில் உள்ள மரபு வழி நாடகங்களை, பிரதேச அடிப்படையில் வகைப்படுத்தி அவற்றில், ஏதாவது ஒன்றின் நிகழ்த்துகை முறை பற்றி விளக்குக.

06. ஈழத்து நவீன நாடக வரலாற்றில் சமகால ஆளுமைகள் எனக் கருதப்படுவோரை வரையறுத்து அவர்களில் எவரேனும் ஒருவரின் நாடகப் பணியினைத் தெளிவுபடுத்துக?

07. இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று விளங்கும் ஆற்றுகைகளை வரையறுத்து அவற்றின் ஏதாவது ஒன்றின் நிகழ்த்துகை முறை தொடர்பாக விளக்குக.

(ம.ப.பா)

08. பின்வருவனவற்றுள் யாதாயினும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) சொக்கரி
(ஆ) பேராசிரியர் E R சரச்சந்திரா
(இ) மகிடிக் கூத்து
(ஈ) பார்சி நாடக மரபு
(உ) கதகளி

*******

LIBRARY
11 FEB 2011